மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது தொடர்பான வழக்கு விரைவாக முடிக்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் துறையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வழக்கு குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, விரைந்து அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 20 ஊராட்சிகள் பயன் பெறுகின்ற வகையிலே, ஒரு துணை மின் நிலையத்திற்கான தேவைகளையெல்லாம் செய்து தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் தனிப்பட்ட முறையிலே கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பத்தே நாட்களில் பெங்களூருவிலிருந்து transformer-ஐ கொண்டுவந்து ரூ.2 கோடி மதிப்பிலான அந்தப் பணிகளையெல்லாம் மிகச் சிறப்பாக நடத்திக்கொடுத்து, அதைத் துவக்குவதற்கான உத்தரவையும் பிறப்பித்து, அந்தப் பகுதி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்செங்கோடு தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

தகவல் ஆணைய கிளை அலுவலகம்

***720—திரு. JMH. அசன் மௌலானா:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 6]

(அ) வேளச்சேரி தொகுதியில் தகவல் ஆணைய கிளை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பதிலைச் சொல்லிவிடுங்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) தமிழ்நாடு தகவல் ஆணையம் சென்னையில் இயங்கி வருவதால், சென்னையின் ஒரு பகுதியான வேளச்சேரியில் அதன் கிளை அலுவலகத்தினை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

(ஆ) எனவே, பொருந்தாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் உரிமை பெறும் ஆணையம்* UPA *அரசால் கொண்டு வரப்பட்டது. இது எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்றால்,* Transparency of the Government— *அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையை மக்கள் உடனே தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் வெளிநாடுகளில் படித்தவர்,* rank to file or file to rank *என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்தந்த முடிவை அந்தந்த இடங்களிலேயே எடுப்பதற்காகத்தான் இந்தத் திட்டமே கொண்டுவரப்பட்டது. ஆகையால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்வது, ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கிளையை ஆரம்பிப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா? உங்கள் துறை கொண்டு வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், தலைவர் கலைஞர் அவர்கள் இதற்கு ஆதரவு மட்டும் தெரிவிக்கவில்லை. சட்டம் வந்தவுடன், இந்தியாவில் முதல் மாநிலமாகத் தமிழகத்தில் இந்த ஆணையத்தை உருவாக்கியதும் தலைவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் இந்த ஆணையத்தின் செயல்பாட்டைச் சிறப்பிப்பதற்குப் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். இந்த ஆணையம் ஆறு உறுப்பினர்கள் கொண்டது;* it is a last resort for Right of Appeal. *ஆங்காங்கே அரசாங்கத்தில் ஒவ்வோர் இடத்திலும்,* designated, RTI reply *கொடுக்க வேண்டிய* officers *துறைவாரியாக, இடம்வாரியாக இருக்கிறார்கள். அங்கே தகவல் பெறமுடியவில்லை என்றால்,* appeal *ஆக, படிப்படியாக இங்கே வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. எங்கள் முயற்சி இதை முழுவதுமாக* online *மூலமாக* immediate action *ஆக* digital *ஆக மாற்றுவதற்குத்தான் கவனம் இருக்கிறதே தவிர, கூடுதல் அலுவலகத்தை உருவாக்குவது, தலைமை அலுவலகமாக உருவாக்குவது, அந்தளவுக்கான பணி செய்ய இயலாது என்று கருதுகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

வக்ஃப் வாரியம்

***202—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களின் உரிமை ஆவண விவரங்களை அதன் இணையதளத்தில் வெளியிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*